පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය : 290
ආයතනයේ නම :- දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - අම්පාර
පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින්
සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක
119 (4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන
පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் - 290
நிறுவனத்தின் பெயர்:- மாவட்ட செயலகம் அம்பாறை
பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால்
முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை
இலக்கம் 119(4)இன் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும்
மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும்
பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

Parliamentary Series No: 290
Name of the institution: - District Secretariat Ampara submission of observation of Hon. Minister and Steps taken with regard to the reports tabled by the Committee on public Accounts in terms of Standing Order No.119 (4)

இலங்கை பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட நிலையியற் கட்டளை 119(4) தொடர்பாக அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளைப் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொகுதி இலக்கம் 290

மாவட்ட செயலகம் - அம்பாறை

| அ.க குழுவினால் எடுத்துக் காட்டபட்ட குறைபாடுகள் மற்றும் வழிகாட்டல்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைள் | தற்போதைய முன்னேற்றம் |
|---|---|---|
| முதலாவது பகுதி : 94.00<br>I. வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்படாமை | வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரிப்பதற்கு உரிய உத்தியோகத்தர்களை அறிவுறுத்தல். | 2023 வருடத்திலிருந்து தயாரிக்கப்பட்டுள்ளது. |
| II. வாகனமொன்று பயன்பாட்டுக்கு எடுக்க முடியாத நிலையில் 8 மாதங்களை விட குறைந்த காலத்தில் வெளியேற்றப்படாது இருந்தது. | தற்போதைக்கு பதிவு செய்யப்பட்ட உரித்துடைய் 07 வாகனங்களை ஏல விற்பனை செய்வதற்கு 2024.03.13 திகதி பெறுகைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| III. 2016.12.29 திகதிய 2016/30 இலக்கம் பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்கு உரித்தான வாகனங்களின் எரிபொருள் எரிதல் தொடர்பாக பரிசோதிக்கப்படாமை. | வாகனங்களில் எரிபொருள் எரிதல் தொடர்பாக பரிசோதிப்பதற்கு மேலதிக மாவட்ட செயலாளருக்கு பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. | வாகனங்களில் எரிபொருள் எரிதல் தொடர்பாக பரிசோதித்தலை விரைவில் மேற்கொண்டு முடிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக மேலதிக மாவட்ட செயலாளர் அறிவித்துள்ளார். |
| IV. சகல வாகனங்களினதும் உரித்தினை உறுதி செய்யும் கடிதங்கள் உடமையில் (பொறுப்பில்) இல்லை | வாகனங்களின் உரித்தினை உரிமை மாற்றம் செய்வதற்கு உரிய அமைச்சுக்களின் ஆட்சேபனைகள் இல்லையென இணக்கப்பாட்டினைப் பெற்றுக் கொள்வதற்கு 2023.09.12 திகதி பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் | பாதுகாப்பு அமைச்சு செயலாளரின் அறிவுறுத்தலுக்கமைய இவ் வாகனங்களின் பதிவு உரித்தினை உரிமை மாற்றம் செய்வத்றகு 2024.03.11 திகதி கோரிக்கையொன்றை நீதிமன்ற, அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுக்கு |

| | | |
|---|---|---|
| | மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயலாளருக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. (குறித்த கடிதம் இணைக்கப்பட்டுள்ளது) அக் கடிதத்திற்கு பதில் பொ.நி.அமை. 2023.12.07 ஆம் திகதிய கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. (குறித்த கடிதத்தின் பிரதி இணைக்கப்பட்டுள்ளன)<br><br>அவ் வாகனங்களின் உரித்து புனர்வாழ்வு அமைச்சிற்கு உரித்துடையதுடன் அவ் அமைச்சிற்குரிய விடயப் பரப்பு தற்போதைய பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ளதென கடந்த கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் போது குறிப்பிடப்பட்டுள்ளதனால் தற்போதைய பாதுகாப்பு அமைச்சின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்கு கடிதமொன்று (2024.01.04) அனுப்பப்பட்டுள்ளது. (அக்கடிதத்தின் பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளன)<br><br>இவ் வாகனங்களுக்குரிய கோவை பாதுகாப்பு அமைச்சில் இல்லை எனவும் புனர்வாழ்வு விடயத்திற்குரிய புனர்வாழ்வு ஆணையாளர் நாயகப் பணிமனை நீதிமன்ற அமைச்சு விடயப்பரப்பிற்கு உரித்தானதென பாதுகாப்பு அமைச்சு செயலாளரின் 2024.02.26 ஆம் திகதிய கடிதம் மூலம் எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (அக்கடிதத்தின் பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளன) | அனுப்பட்டுள்ளது. (அக் கடிதத்தின் பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளன. |

| | | |
|---|---|---|
| இரண்டாவது பகுதி : 76.00<br>i. 2018.01.24 திகதி 05/2018(i) இலக்க சுற்றறிக்கையின் திருத்தப்பட்ட 2008.02.06 திகதி 05/2008 இலக்க பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் பிரஜைகள்/சேவை பெறுநர் பட்டயம் உரிய முறையில் தயாரித்து செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பிரஜைகள்/சேவை பெறுநர் பட்டயம் தயாரிக்கப்பட்டுள்ளது. | பிரஜைகள்/ சேவை பெறுநர் பட்டயம் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. |
| ii. 2018 ஜனவரி 24 ஆம் திகதிய 02/2018 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய உரிய முறையில் தயாரிக்கப்பட்ட மனித வள திட்டமொன்று தயாரிக்கப்பட்ட மனித வள திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காமை | மனித வள அபிவிருத்தி திட்டம் தயாரிப்பதற்குத் தேவையான அறிவுரை வழங்கப்பட்டிருத்தல். | 2023 ஆண்டிலிருந்து தயாரிக்கப்பட்டுள்ளது. |
| iii. தயாரிக்கப்பட்ட மனித வள திட்டம் ஊடாக பணித்றொகுதியினரில் நூற்றுக்கு 50 க்கு மேற்பட்டோருக்கு ஒரு வருடத்திற்கு ஆகக் குறைந்தது 12 மணித்தியாலத்திற்கு குறையாத பயிற்சி வாய்பொன்றை உறுதி செய்யப்படாமை. | மனித வள அபிவிருத்தி திட்டத்தை தயாரிக்கும் போது இதற்கு தேவையான நடவடிக்கை எடுக்குமாறு உதவி மாவட்ட செயலாளருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | 2023 ஆண்டிலிருந்து தயாரிக்கப்பட்டுள்ள மனித வள அபிவிருத்தி திட்டம் மூலம் ஒரு ஊழியருக்கு 12 மணித்தியால பயிற்சியொன்று வழங்குவதற்கு ஏற்பாடுகள். தயாரிக்கப்பட்டுள்ளது. |
| iv. முழு பணிற்றொகுதியினரையும் உள்ளடக்கி செயலாற்றுகை உடன்படிக்கை தயாரித்து உடன்படிக்கை செய்யப்படாமை. | ------------------------------------ | 2023.11.30 திகதி 02/2018(i) இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை ஊடாக செயலாற்றுகை உடன்படிக்கை தயாரித்தல் இரத்து செய்யப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| v. திட்டமிடப்பட்ட பயிற்சி சந்தர்ப்பங்களினால் வழங்கப்பட்டிருந்த பயிற்சி வாய்ப்புக்களின் அளவு 50% ஐ விட குறைந்த மட்டத்தில் காணப்படல். | உயர்ந்த பட்ச எல்லை வரை குறித்த பயிற்சி வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அறிவுரை வழங்கியிருத்தல். | 2023 ஆண்டிலிருந்து தயாரிக்கப்பட்ட மனித வள அபிவிருத்தித் திட்டத்திற்கு அமைய அதி உயர்ந்த பட்ச எல்லை வரை குறித்த பயிற்சி வேலைத்திட்டங்களை திட்டமிட்டு நடைமுறைப்பத்தப்பட்டு வருகின்றது. |
| vi. இனங்காணப்பட்ட பணிக்குறிகாட்டியைஅடைதல் 24% ஐ விட குறைந்த அளவில் இருத்தல் | சகல பணி குறிகாட்டி இலக்குகளையும் அடைவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | இவ் அறிவுரைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

மாவட்ட செயலாளர்,
மாவட்ட செயலகம்,
அம்பாறை.

Chinthaka Abeywickrama
Government Agent
District Secretary
Ampara District

பிரதம கணக்காளர்,
மாவட்ட செயலகம்,
அம்பாறை.

S.L. ATHAMBAWA
Chief Accountant
For Government Agent
Ampara - District

# දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - අම්පාර
# மாவட்ட செயலகம் - அம்பாறை
# DISTRICT SECRETARIAT - AMPARA

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| දිසාපති<br>அரசாங்கஅதிபர்<br>Government Agent | 063-2222206 | අතිරේක දිසාපති<br>மேலதிகஅரசாங்கஅதிபர்<br>Add. Gover. Agent | 063-2223553 | පොදු<br>பொது<br>General | 063-2222233<br>063-2222234 | ෆැක්ස්<br>பேக<br>Fax | 063-2222130<br>063-2222236 |

වෙබ් අඩවිය/இணையதளம்Website:www.ampara.dist.gov.lkවිද්‍යුත් තැපැල/மின்னஞ்சல்/Email:Info@dist.ampara.gov.lk,distsecampara@gmail.com


| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No. | AMP/TRANS/07/01 | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 2023.09.12 |

செயலாளர்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு
நில மெதுர,
அல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு – 05

**<u>வாகனங்களின் பதிவு உரிமை மாற்றும் செய்தல் தொடர்பாக</u>**

2018.10.10 திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றுநிருப இலக்கம் 3/2016-2(அ) பந்தியில் உரியவாறு எமது காரியாலயத்தினால் பயன்படுத்தப்படும் வாகனங்களின் பதிவு உரிமையினை மாவட்ட செயலாளர், அம்பாறை எனும் பெயரிற்கு மாற்றுவதற்காக தேவையான MTA 06 மாதிரிப் படிவத்தை எனது சமஇலக்கம் மற்றும் 2023.01.24 திகதிய கடிதத்தினூடாக திறைசேரியின் கொம்ரோலர் நாயகத்திற்கு மோட்டார் வாகன ஆணையாளரின் உரிமை தொடர்பாக இணைப் பிரதியுடன் சமர்பபிக்கப்பட்டுள்ளது அதற்குரிய வாகன விபரங்கள இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

02. எவ்வாறிருந்தும் கொம்ரோலர் நாயகத்தின் CGO/ASM/Vehicle issue/DS/01/Vol-II மற்றும் 2023.04.18 திகதிய கடிதத்தினூடாக உரிமையினை அம்பாறை மாவட்ட செயலாளருக்கு மாற்றுதல் தொடர்பாக அவ் வாகனங்களின் தற்போதைய உரிமைக்காரராக குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களில் விடயத்தளத்திற்கு ஏற்புடையதாக தற்போதுள்ள அமைச்சுக்களில் எதிர்ப்புக்கள் இல்லை என்பதற்கான சிபார்சினை சமர்ப்பிக்குமாறு எனக்கு அறிவூட்டல் செய்யப்பட்டுள்ளது அக்கடித்தின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது.

03. ஆகையால் அகற்றும் பணிகளை மேற்கொள்வதற்காக உரிமையினை மாற்றும் பணிகளை மிக விரைவில் மேற்கொள்ள வேண்டியுள்ளதுடன், இது தொடர்பாக கணக்காய்வு திணைக்களத்தினூடாக அடிக்கடி விசாரிக்கப்படுகின்றது. இவ்வாகனங்கள் 22 வருடங்களுக்கு மேலான காலங்கள் அகற்றுவதற்காக வைக்கப்பட்டுள்ளதுடன் அதன் உரிமை இல்லாத காரணத்தினால் அது தொடர்பாக மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியாமல் உள்ளது என தெரிவித்துக் கொள்கின்றேன்.

04. ஆகையால் இவ் வாகனங்களின் உரிமை மாற்றம் செய்வதற்காக உரிய அமைச்சுக்களில் எதிர்ப்புக்கள் நிலவுகின்றதா என்பது தொடர்பாக விசாரித்து பார்ப்பதற்கு அமைச்சுக்களின் தகவல்கள் தங்களிடம் இருக்குமாயின் அத் தகவல்களை எனக்கு பெற்றுத்தருமாறு தெரிவித்துக் கொள்வதுடன் அவ்வாறு இல்லாவிட்டால் உரிய வாகனங்களை மாற்றம் செய்வதற்காக எதிர்ப்புக்கள் இல்லை என்பது பற்றிய கடிதமொன்றை தங்களது அமைச்சினூடாக வழங்குமாறும் பணிவாய் கேட்டுக் கொள்கின்றேன்.

சிந்தக அபேவிக்ரம,
அரசாங்க அதிபர்/மாவட்ட செயலாளர்,
அம்பாறை மாவட்டம்

2023.12.07

அரசாங்க அதிபர்/மாவட்ட செயலாளர்,
அம்பாறை

**<u>வாகனங்களின் பதிவு உரிமை மாற்றம் செய்தல் தொடர்பாக</u>**

மேற்கூறப்பட்ட விடயம் தொடர்பாக தங்களது AMP/ADMN/TRANS/07/01 சம இலக்கமுடைய பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள 2023.09.12 திகதிய கடிதம் தொடர்பாக.

02. அதற்கு ஏற்ப 2023.01.24 திகதிய கொம்ரோலர் நாயகத்திற்கு தங்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்கள் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி பிரிவு (மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சி) எனும் பெயரில் பதிவு செய்யப்பட்டவில்லையென்பதை தேவையான நடவடிக்கைக்காக பணிவாய் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நிஷாந்த கருணாதிலக்க
மேலதிக செயலாளர் (நிருவாக மற்றும் பயிற்சி) (ப.க)
மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிப் பிரிவு
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண நபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
செயலாளருக்காக


தொ.இல - 011-2347528
பெக்ஸ் - 011-2347532
மின்னஞ்சல் - admin.div@pc lg.gov.lk
விலாசம் - 330 யூனியன் தெரு, கொழும்பு – 02


பிரதி :-
01. செயலாளரின் ஒருங்கிணைப்பு செயலாளர் - செயலாளர் அறிவூட்டுவதற்காக

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - අම්පාර
மாவட்ட செயலகம் - அம்பாறை
DISTRICT SECRETARIAT - AMPARA

දිසාපති / அரசாங்கஅதிபர் / Government Agent: 063-2222206
අතිරේක දිසාපති / மேலதிகஅரசாங்கஅதிபர் / Add. Gover. Agent: 063-2223553
පොදු / பொது / General: 063-2222233, 063-2222234
ෆැක්ස් / பேக்ஸ் / Fax: 063-2222130, 063-2222236

වෙබ් අඩවිය/இணையதளம்Website:www.ampara.dist.gov.lkවිද්‍යුත් තැපැල/மின்னஞ்சல்/Email:Info@dist.ampara.gov.lk,distsecampara@gmail.com

මගේ අංකය / எனது இல / My No.: AMP/ADMN/TRANS/07/01
ඔබේ අංකය / உமது இல / Your No.:
දිනය / திகதி / Date: 2024.01.04

செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு

**<u>வாகனங்களின் பதிவு உரிமை மாற்றம் செய்தல் தொடர்பாக</u>**

2018.10.10 திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்று நிருப இலக்கம் 3/2018-2(அ) பந்தியில் உரியவாறு எமது அலுவலகத்தினால் பயன்படுத்தப்படும் வாகனங்களின் பதிவு உரிமையினை மாவட்ட செயலாளர், அம்பாறை எனும் பெயரிற்கு மாற்றம் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

02. அதற்கு ஏற்ப இத்துடன், இணைக்கப்பட்டுள்ள வாகனங்களின் மூலப் பதிவு உரிமையினை புனர்வாழ்வு மற்றும் சமூக நலன்புரி அமைச்சு எனும் பெயரில் இருந்ததுடன், தற்போது அவ் அமைச்சு மூடப்பட்டுள்ளபடியால், அவ் அமைச்சின் பகுதி தற்போது பாதுகாப்பு அமைச்சின் கீழ் நடத்தப்பட்டு வருகின்றது.

03. ஆகையினால் இணைக்கப்பட்டுள்ள வாகனங்களுக்குரிய கோவைகள் தங்களது அமைச்சில் இருக்குமானால், அவ் வாகனங்களின் உரிமையினை மாற்றுவதற்காக தேவையான ஒத்துழைப்பினை வழங்குமாறு மிகவும் பணிவாய் கேட்டுக் கொள்கின்றேன்.

04. இது தொடர்பாக தாங்கள் வழங்கும் ஒத்துழைப்பிற்கு நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிந்தக அபேவிக்ரம,
அரசாங்க அதிபர்/மாவட்ட செயலாளர்
அம்பாறை மாவட்டம்

2024.02.26

மாவட்ட செயலாளர்,
மாவட்ட செயலகம்,
அம்பாறை

**வாகனங்களின் பதிவு உரிமை மாற்றம் செய்தல் தொடர்பாக**

உமது இலக்கம் AMP/ADMN/TRANS/07/01 மற்றும் 2024.01.04 திகதிய கடிதம் தொடர்பாக

தங்களால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தினூடாக 12 வாகனங்களின் தகவல்கள் இவ் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அத்தகவல்கள் சமர்ப்பிக்கபட்டுள்ள வாகனங்களின் மூலப் பதிவு உரிமை புனர்வாழ்வு மற்றும் சமூக நலன்புரி அமைச்சின் பெயரில் இருந்ததாகவும், அவ் வானகங்கள் 12 ற்கு மாவட்ட செயலாளர், அம்பாறை எனும் பெயரிற்கு மாற்றம் செய்ய வேண்டியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

02. இவ் அமைச்சில் உள்ள கடித ஆவணங்களுக்கு ஏற்ப தங்களால் தகவல்களை முன்வைத்துள்ள 12 வாகனங்களுக்குரிய கோவைகள் எதுவும் இவ் அமைச்சிற்கு சொந்தமாக இல்லையென பணிவாய் தெரிவித்துக் கொள்கின்றேன்.

03. மேலும் புனர்வாழ்வு விடயத்திற்கு உரிய புனர்வாழ்வு ஆணையாளர் நாயக பணியக நீதிமன்ற அமைச்சு விடய தளத்திற்கு உரியது என்பதை மேலுமாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

காமினி மஹகமமே,
மேலதிக செயலாளர் (நிருவாக)
பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்காக,

# දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - අම්පාර
# மாவட்ட செயலகம் - அம்பாறை
# DISTRICT SECRETARIAT - AMPARA

දිසාපති / அரசாங்கஅதிபர் / Government Agent – 063-2222206
අතිරේක දිසාපති / மேலதிகஅரசாங்கஅதிபர் / Add. Gover. Agent – 063-2223553
පොදු / பொது / General – 063-2222233, 063-2222234
ෆැක්ස් / பேக / Fax – 063-2222130, 063-2222236

වෙබ් අඩවිය/இணையதளம்Website:www.ampara.dist.gov.lkවිද්‍යුත් තැපැල/மின்னஞ்சல்/Email:Info@dist.ampara.gov.lk,distsecampara@gmail.com


මගේ අංකය / எனது இல / My No. – AMP/ADMN/TRANS/07/01
ඔබේ අංකය / உமது இல / Your No. –
දිනය / திகதி / Date – 2023.03.11

செயலாளர்,
சிறைச்சாலைகள், நீதிமன்றம் மற்றும்
அரசியல் யாப்பு மறுசீரமைப்பு அமைச்சு,
கொழும்பு

**<u>வாகனங்களின் பதிவு உரிமை மாற்றம் செய்தல் தொடர்பாக</u>**

2018.10.10 திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றுநிருப இலக்கம் 3/2018-2(அ) பந்தியில் உரியவாறு எமது காரியாலயத்தினால் பயன்படுத்தப்படும் வாகனங்களின் பதிவு உரிமையினை மாவட்ட செயலாளர், அம்பாறை எனும் பெயரிற்கு மற்றம் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

02. அதற்கு ஏற்ப இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வாகனங்களின் மூலப் பதிவு உரிமை புனர்வாழ்வு மற்றும் சமூக நலன்புரி அமைச்சு எனும் பெயரில் இருந்ததுடன், தற்பொழுது அவ் அமைச்சு மூடப்பட்டுள்ளபடியால், அவ் அமைச்சின் பகுதியினை தற்போது தங்களது அமைச்சின் கீழ் இருக்கும் புனர்வாழ்வு விடயத்திற்கு உரியது என 2024.02.26 ஆந் திகதிய கடிதத்தினூடாக பாதுகாப்பு அமைச்சினால் எனக்கு அறிவூட்டுதல் செய்யப்பட்டுள்ளது. அக் கடிதத்தின் பிரதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

03. ஆகையால் இணைக்கப்பட்டுள்ள வாகனங்களுக்குரிய கோவைகள் தங்களது அமைச்சில் இருக்குமாயின், அவ் வாகனங்களின் உரிமையினை மாற்றுவதற்காக தேவையான ஒத்துழைப்பினை வழங்குமாறு மிகவும் பணிவாய் கேட்டுக் கொள்கின்றேன்.

04. இது தொடர்பாக தாங்கள் வழங்கும் ஒத்துழைப்பிற்கு நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிந்தக அபேவிக்ரம,
அரசாங்க அதிபர்/மாவட்ட செயலாளர்,
அம்பாறை மாவட்டம்

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - අම්පාර
மாவட்ட செயலகம் - அம்பாறை
**DISTRICT SECRETARIAT - AMPARA**

දිසාපති / அரசாங்கஅதிபர் / Government Agent 063-2222206
අතිරේක දිසාපති / மேலதிகஅரசாங்கஅதிபர் / Add. Gover. Agent 063-2223553
පොදු / பொது / General 063-2222233, 063-2222234
ෆැක්ස් / பேக / Fax 063-2222130, 063-2222236

වෙබ් අඩවිය/இணையதளம்Website:www.ampara.dist.gov.lkවිද්‍යුත් තැපැල/மின்னஞ்சல்/Email:Info@dist.ampara.gov.lk,distsecampara@gmail.com

මගේ අංකය / எனது இல / My No. AMP/ADMN/VEHIC/23/01/111(II)
ඔබේ අංකය / உமது இல / Your No.
දිනය / திகதி / Date 2024.03.13

1. எச்.எஸ்.என்.டி.சொய்சா சிறிவர்தன – தவிசாளர்
   மேலதிக மாவட்ட செயலாளர், அம்பாறை

2. திரு.எஸ்.ஏ.ஆர்.சுபசிங்க - அங்கத்தவர்
   பிரதம உள்ளககணக்காய்வாளர்
   உள்நாட்டலுவல்கள் பிரிவு

3. திரு.எஸ்.எல்.ஆதம்பாவா - அங்கத்தவர்
   பிரதம கணக்காளர்
   மாவட்ட செயலகம், அம்பாறை

4. திரு.கே.ஏ.டீ.டீ.எச்.நானயக்கார – அங்கத்தவர்
   இயந்திர பொறியியலாளர்
   நீர்ப்பாசன திணைக்களம், அம்பாறை

5. திரு.கே.மதிவண்ணன் - அங்கத்தவர்
   பிரதம மோட்டார் வாகன பரிசோதகர்
   மாவட்ட செயலகம், அம்பாறை

**<u>அம்பாறை மாவட்ட செயலகத்தின் அகற்றப்பட்ட வாகனங்களை ஏல விற்பனை செய்வதற்காக பெறுகைத்திட்ட குழுவினை நியமித்தல்</u>**

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் HA/F/DA/15/Dispose/Common/2023 மற்றும் 2024.02.28 திகதிய கடிதத்தினூடாக பெறுகைத்திட்ட குழுவிற்கு தாங்கள் ஐந்துபேரை நியமிப்பதற்காக எனக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

02. அதற்கு ஏற்ப மேற்கூறப்பட்ட பெறுகைத்திட்ட குழுவிற்கு தாங்கள் தவிசாளர்/ அங்கத்தவராக நியமிப்பதுடன், நிதி அமைச்சின் சுற்றுநிருப இலக்கம் 01/2020 I பகுதியில் 13.2 பந்தி நி.ஓ 770(4) ஏற்ப நடவடிக்கையினை மேற்கொண்டு அவ் வாகனங்களை ஏலவிற்பனை செய்வதற்காக உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிந்தக அபேவிக்ரம,
அரசாங்க அதிபர்/மாவட்ட செயலாளர்,
அம்பாறை மாவட்டம்

## செயலாளரின் பரிந்துரை

மாவட்ட செயலாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட செயலாளரிக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

பிரதீப் யசரத்ன

செயலாளர்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

Pradeep Yasarathna
Secretary
Ministry of Public Administration, Home Affairs,
Provincial Councils & Local Government
(Home Affairs Division)
"NILA MEDURA" Elvitigala Mawatha, Colombo 05

## அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அரசாங்க கணக்குக்குழு மூலம் மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளரிற்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2024 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவு மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

கௌரவ தினேஸ் குணவர்தன (பா.உ.)

பிரதம அமைச்சர் மற்றும்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்